

28.10.2026 செய்திகள்

சாதிவாரிக் கணக்கெடுப்பு

- சுதந்திர இந்தியாவின் 8ஆவது தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இரு கட்டங்களாக வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது.
- முதல் கட்டம் 2026 ஏப்ரலில் தொடங்கி, செப்டம்பர் 30ஆம் தேதி முடிவடைந்தது. இரண்டாம் கட்டமாக, வரும் 2027 பிப்ரவரியில் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்பட இருக்கிறது.

» தேவையும் வரலாறும்

- கல்வி – வேலைவாய்ப்பில் இடஒதுக்கீட்டின் மூலம் கிடைக்கும் பலன்கள் அனைத்துச் சமூகப் பிரிவுகளையும் சரியான முறையில் சென்றடைய வேண்டும்.
- அதற்கு ஒவ்வொரு பிரிவிலும் உள்ள மக்களின் எண்ணிக்கை துல்லியமாகக் கணக்கெடுக்கப்பட வேண்டும் – இந்தக் கருத்தாக்கத்தின் அடிப்படையில்தான் சாதிவாரிக் கணக்கெடுப்பு தேவை எனப் பல்வேறு தரப்பினர் வாதிடுகின்றனர்.
- காலனிய இந்தியாவில் 1871 இல் முதன்முதலாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 1921 இல் மதரீதியிலான புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டன.
- பின்னர், 1931 இல் முதல் சாதிவாரிக் கணக்கெடுப்பு நாடு முழுவதும் நடத்தப்பட்டது. இந்தத் தரவுகளின் அடிப்படையில்தான் 1932 இல் நடந்த லண்டன் வட்டமேசை மாநாட்டில் பாபாசாகேப் அம்பேத்கரும், இரட்டைமலை சீனிவாசனும் பட்டியல் சாதியினருக்குக் கல்வியிலும் அரசு வேலைகளிலும் ஆட்சிமன்ற மக்கள் பிரதிநிதித்துவத்திலும் தனி இடஒதுக்கீடு வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்து வெற்றி கண்டனர்.
- 1941 இல் இரண்டாம் உலகப் போரின் தீவிரத்தால் கணக்கெடுப்பு முழுமையாக நடக்கவில்லை. நாடு சுதந்திரம் பெற்ற பிறகு அமைந்த மத்திய அரசுகள் சாதிவாரி விவரங்களைத் தொகுக்கத் தயங்கிக் கைவிட்டன.
- 1931க்குப் பிறகு 80 ஆண்டுகள் கழித்து 2011 இல் சமூக-பொருளாதாரச் சாதிக் கணக்கெடுப்பு நடத்தப்பட்ட போதிலும் அதன் தரவுகள் முழுமையாக வெளியிடப்படவில்லை.
- இதன் பின்னணியில், சரியான முறையைத் தேர்ந்தெடுத்துத் தகவல் சேகரிக்காததன் தோல்வி, வாக்கு அரசியல் ஆகிய காரணங்கள் இருந்ததை அரசியல் தலைவர்களும் சமூக ஆர்வலர்களும் சுட்டிக்காட்டினர்.
- நாட்டின் மக்கள் தொகை பன்மடங்கு பெருகியிருக்கும் நிலையில், 1932 இல் வழங்கப்பட்ட இடஒதுக்கீடு அளவு, இப்போதைய மக்கள் தொகைக்கு எவ்வாறு பொருந்தும் என்கிற கேள்வியை எழுப்பினர்.
- அதன் அடிப்படையில்தான் மத்திய அரசு 16 ஆவது தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்த ஒப்புக்கொண்டது.

» இரண்டு கட்டங்கள்

- முதல் கட்டம் 2026 ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 வரை நடைபெற்றது. இதில் கணக்கெடுப்பாளர்கள் நேரடியாகச் சென்று வீடுகளின் எண்ணிக்கையைப் பட்டியலிடுதல் – வீட்டு வசதியைக் கணக்கிடுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டனர்.
- பொதுமக்கள் கணினி அல்லது கைப்பேசி மூலம் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, வீட்டு வசதி ஆகியன குறித்த தகவல்களை www.se.census.gov.in என்கிற மத்திய அரசின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் உள்ளிட்டுப் பதிவு செய்யும் வகையில் சுயதகவல் சேர்க்கும் வசதியை 2026 ஜூலை 17 முதல் ஜூலை 31 வரை அனுமதித்தது.
- சாதிவாரிக் கணக்கெடுப்பாக நடத்தப்பட இருக்கும் இரண்டாம் கட்டம், 2027 பிப்ரவரி 1 முதல் பிப்ரவரி 28 வரை நடக்கிறது.
- லடாக், ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட் உள்படப் பனிப்பொழிவை எதிர்கொள்ளும் பிராந்தியங்களில் இந்த இரண்டாம் கட்டக் கணக்கெடுப்புப் பணிகள் நான்கு மாதங்கள் முன்னதாகவே நடைபெற்றன.

» பிஹார் முன்மாதிரி

- மாநில அரசுகளுக்குச் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த அதிகாரம் உண்டு என்பதை பிஹார் உயர்நீதிமன்றமும், நாட்டின் உச்சநீதிமன்றமும் உறுதி செய்து தீர்ப்பளித்தன.
- அதன்பின், 2023 இல் அன்றைய முதல்வர் நிதிஷ் குமார் தலைமையிலான அரசு 45 நாள்களில் சாதிவாரிக் கணக்கெடுப்பை வெற்றிகரமாக நடத்தி முடித்துப் புள்ளிவிவரங்களை அறிவித்தது.
- அந்தக் கணக்கெடுப்பில் மொத்தம் 215 சாதிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 13 கோடியே 7 லட்சம், அதில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 36%, இதர பிற்படுத்தப்பட்டோர் 27.13%, பட்டியல் சாதியினர் 19.65%, பழங்குடியினர் 1.68%, பொதுப்பிரிவினர் 15.52% எனத் தெரியவந்தது.
- மேலும், வகுப்புவாரியாக ஒவ்வொரு பிரிவிலும், எந்தெந்தச் சாதியினர் எவ்வளவு எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்கிற விவரமும் இடம்பெற்றிருந்தது.

» தமிழ்நாட்டின் 69%

- தமிழ்நாட்டில் நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் 1921 இல் அமல்படுத்தப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அரசாணை மூலம் இடஒதுக்கீட்டுக்கு வித்திடப்பட்டது.
- முதலாவது அரசமைப்புச் சட்டத்திருத்தம் (1951) நடந்த பின் தொடுக்கப்பட்ட செண்பகம் துரைராஜன் வழக்கின் தீர்ப்பால் இடஒதுக்கீடு பாதிக்கப்பட்டபோது, பெரியார் நடத்திய போராட்டத்தால் இந்திய அரசமைப்பில் சட்டக்கூடு 15(4) சேர்க்கப்பட்டது.
- பின்னர், உச்சநீதிமன்றம், சமூக-கல்வி ரீதியாகப் பின்தங்கிய மக்களுக்கு அரசு வழங்கும் அனைத்து இடஒதுக்கீடுகளையும் கூட்டினால், அது 50% தாண்டக்கூடாது என்கிற வரம்பை விதித்தது.
- ஆனால் அந்த வரம்பைத் தாண்டி தமிழக மக்களின் சமூகப் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, 69% இடஒதுக்கீட்டுச் சிறப்புப் பட்டம் (1994) தமிழ்நாட்டில் இயற்றப்பட்டு அமல்படுத்தப்பட்டதுடன், அதை அரசமைப்பின் 9 ஆவது அட்டவணையில் சேர்த்தது தமிழ்நாடு.
- 2010 இல் தமிழ்நாட்டின் 69% இடஒதுக்கீட்டை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், 69% இடஒதுக்கீடு செல்லும்; ஆனால், அதைத் தக்கவைக்கச் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தித் தரவுகளை உறுதி செய்ய வேண்டும் என்று ஆணையிட்டது.

- எனவே, தற்போதைய 69% இடஒதுக்கீட்டை நீதிமன்றங்களில் சட்டப்பூர்வமாகப் பாதுகாப்பதுடன், தற்போதைய சாதிவாரிக் கணக்கெடுப்பின் நிலைக்குப் பிறகு அதில் உயர்வைக் கொண்டுவர வேண்டுமெனில் சாதிவாரிக் கணக்கெடுப்புத் தரவுகள் இன்றியமையாதவை ஆகின்றன.

» அவசரத் தேவை

- பிஹார் மேற்கொண்ட சாதிவாரிக் கணக்கெடுப்பு முன்மாதிரியைப் பின்பற்றி பிரத்யேக செயலி மூலம் சாதி வாரித் தகவல்களைத் திரட்டும்போது, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சாதிகளின் பட்டியல் தரவுகளை, அந்தந்த மாநில அரசுகளிடம் பெற்றுப் பதிவேற்றி, அதன் அடிப்படையிலேயே மக்களிடம் சாதிவாரித் தகவல்களைப் பெற வேண்டும்.

இயற்பியலில் வரலாற்றுச் சாதனை : ஆஸ்கார் கிளைன் பதக்கம் வென்ற இந்திய விஞ்ஞானி அசோக் சென்

- இயற்பியல் துறையின் உயரிய விருதுகளின் ஒன்றான கிளைன் பதக்கத்தை இந்திய விஞ்ஞானி அசோக் சென் பெற்றுள்ளார்.
- இவ்விருதை பெறும் முதல் இந்திய இயற்பியலாளர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.
- எஸ்-டுவாலிட்டி, துல்லியமாகக் கணக்கிடும் கருந்துளை, என்ட்ரோபி மற்றும் ஸ்டிரிங் ஃபீல்டு கோட்பாடு ஆகியவற்றில் ஆற்றிய முன்னோடிப் பணிகளுக்காக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.
- இவை அனைத்தும் நவீன ஸ்டிரிங் கோட்பாட்டை வடிவமைக்க உதவியுள்ளன.
- நரம்பிசையிலிருந்து ஈர்ப்பு விசை, ஈர்ப்பு விசையிலிருந்து நரம்பிளை என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஸ்டிரிங் கோட்பாட்டுக்கு ஒரு ஒருங்கிணைக்கும் கட்டமைப்பை நிறுவியதில் ஆற்றிய பங்களிப்புகளுக்காக, 2012-ல் அடிப்படை இயல்பியலுக்கான 'பிரேக்த்ரூ' பரிசையும், 2014-ல் டிராக் பதக்கத்தையும் அசோக் சென் பெற்றார்.
- இது மட்டும் இன்றி இந்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ (2001) மற்றும் பத்மபூஷன் (2013) விருதுகளை வழங்கி கவுரவித்துள்ளது.

» ஆஸ்கார் கிளைன் சிறப்பு என்ன?

- ஸ்டாக்ஹோம் பல்கலைக் கழகம் மற்றும் ராயல் ஸ்வீடிஷ் அகாடமியின் நோபல் இயற்பியல் குழு இணைந்து 1988-ம் ஆண்டு முதல் 'ஆஸ்கார் கிளைன்' விருதை வழங்கி வருகிறது.
- தத்துவார்த்த இயற்பியல் மற்றும் அண்டவியல் துறையில் சிறந்த பங்களிப்பை வழங்குபவர்களுக்கு இது வழங்கப்படுகிறது.

நறுமண பொருள் 'ஸ்டார்ட்அப்' களுக்கு 10 லட்சம் ரூபாய் மானிய உதவி

» வேளாண் பல்கலைக்கழகம் அழைப்பு

» தகுதிகள்

- நறுமண பொருட்களை அடிப்படையாக கொண்ட தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள் சார்ந்த துறையில் செயல்பட வேண்டும்.

- மதிப்புக் கூட்டுதல் அல்லது பதப்படுத்துதல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும்.
- சட்டப்பூர்வமாக பதிவு செய்யப்பட்ட ஸ்டார்ட்அப் நிறுவனமாக இருக்க வேண்டும்.
- புதுமையான அணுகுமுறைகளையும் வர்த்தக ரீதியாக வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளையும் கொண்டிருக்க வேண்டும்.

» திட்டத்தின் பலன்

- ஆரம்ப நிலையில் உள்ள நிறுவனங்கள் தங்களுடைய உற்பத்தி திறனை மேம்படுத்தவும், சந்தையில் நறுமண பொருட்களை அடிப்படையாக கொண்ட தயாரிப்புகளை உருவாக்கவும் உதவும்.

» நறுமண பொருள் மையங்கள்

- சி.எப்.டி.ஆர்.ஐ., மைசூரு, கர்நாடக மாநிலம்
- நிப்டெம், தஞ்சாவூர்.
- வணிக காப்பகம், வேளாண் பல்கலைக்கழகம், கோவை

பேலன் தோர் விருது வென்ற ஹேரி கேன், அலெக்ஸியா புடெலாஸ்

- கால்பந்து உலகில் கௌரவமிக்கதாக இருக்கும் வேலன் தோர் விருது, நடப்பாண்டில் இங்கிலாந்தின் ஹேரிகேன், ஸ்பெயினின் அலெக்ஸியா புடெலாஸ் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

» ஹேரி கேன் (சிறந்த வீரர்)

- முதல்முறையாக இந்த விருதை வென்றுள்ள கேன், கடந்த 25 ஆண்டுகளில் இவ்விருதை வென்ற முதல் இங்கிலாந்து வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

» அலெக்ஸியா புடெலாஸ் (சிறந்த வீராங்கனை)

- பார்சிலோனா அணியில் விளையாடும் ஸ்பெயின் வீராங்கனை அலெக்ஸியா, 3-ஆவது முறையாக (2021, 2022, 2026) இந்த விருதை வென்றுள்ளார்.

» லேமின் யமால் (சிறந்த இளம் வீரர்)

- 19 வயதான இவர், 2026 ஃபிஃபா உலகக் கோப்பை போட்டியில் ஸ்பெயின் அணிக்காக 7 ஆட்டங்களில் 7 கோல்கள் அடித்தார்.

» விக்கி லோபஸ் (சிறந்த இளம் வீராங்கனை)

- ஸ்பெயின் வீராங்கனையான இவர் பார்சிலோனா கிளப்பில் அங்கம் வகிக்கிறார்.
- லூயிஸ் டெலாஃபியுண்டே (ஸ்பெயின்) (சிறந்த பயிற்சியாளர் / ஆடவர் அணி)
- பெரெ ரோமியு (ஸ்பெயின்) (சிறந்த பயிற்சியாளர் / மகளிர் அணி)

» உனாய் சைமன் (சிறந்த கோல் கீப்பர் / ஆடவர்)

- ஸ்பெயின் வீரரான இவர், அத்லெடிக் பில்பாவ் கிளப்பில் விளையாடுகிறார்.

» கேட்டலினா கோல் (சிறந்த கோல்கீப்பர் / மகளிர்)

- பார்சிலோனா கிளப்பில் விளையாடும் ஸ்பெயின் வீராங்கனை